**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE COURT, HOSUR**

S.C. Case No : 13/2021

Deposition of witness for Prosecution : Pw2

Defence :

Name : Marialio wilbert
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed and on date 27.10.2021 in accordance with the provision with the Act of 1983.

நான் என்ஜிஓ காலனி பாகலூர் ஒசூரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 ஐயும் ஆஜர் எதிரியையும் எனக்குத் தெரியும். நான் ஜேஎம்ஜே இன்டஸ்ட்ரிசில் 6 ஆண்டுகளாக குவாலிட்டி இன்ஜார்ஜ் ஆக வேலை பார்த்து வருகிறேன். சம்பவம் நடப்பதற்கு 6 வருடத்திற்கு முன்பில் இருந்து தற்போது வரை நான் ஜேஎம்ஜே கம்பெனியில் வேலை செய்கிறேன். அ.சா.1 எங்கள் கம்பெனியில் புரொடக்சன் பிரிவில் வேலை பார்க்கிறார். 29.12.12 அன்று காலை 8 மணிக்கு நான் பணிக்கு வந்தேன். அப்பொழுது எதிரிக்கும் அ.சா.1க்கும் பிரச்சனை நடந்து ஒட்டுநர் அ.சா.1 ஐ வெட்டிவிட்டதாக சொன்னார்கள். அதன் பின்பு 30.12.12 அன்று காலை 8. 30 மணிக்கு சிப்காட் போலிசில் இருந்து வந்தார்கள். போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு எழுதிக்கொண்டார்கள். சம்பவ இடத்தை பார்த்து வரைபடம் வரைந்தார்கள். என்னை படித்து பார்த்து விட்டு கையெழுத்து போடும்படி சொன்னார்கள். நானும் ராமலிங்கம் என்பவரும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரின் முதலாவது உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் அ.சா.2. அதன் பின்பு கம்பெனிக்கு பின்புறம் உள்ள காலியிட்தில் போலிசார் தேடி பார்த்தார்கள். ஒரு இடத்தில் முட்புதரில் வெட்டும் அருவாள் இருந்தது. அதை போலிசார் எடுத்து வந்தார்கள்.அப்பொழுது காலை சுமார் 9.30 மணி இருக்கும். அருவாள் எடுத்து வந்ததற்கு போலிசார் எழுதிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் என்னுடைய

கையெழுத்து உள்ளது. என்னுடன் ராமலிங்கம் என்பவரும் கையெழுத்துப்போட்டார். மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சா.3. போலிசார் என்னை விசாரித்தார்கள். காயம் பட்ட சரவணனை செயின் ஜான்ஸ் மருத்துவமனையில் போய் பார்த்தேன்.

குறுக்கு விசாரணை:

எனக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியும். கைப்பற்றதல் மகஜரை எழுதிவிட்டு போலிசார் படித்து காண்பித்தார்கள். நான் எழுதும் போது பக்கத்தில் தான் இருந்தேன். அ.சா.ஆ.3 ல் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் எனக்குத் தெரியும். போலிசார் அருவாளை மட்டும் தான் கைப்பற்றினார்கள். அந்த அருவாள் சுமார் 48 முதல் 50 செ.மீ நீளம் இருக்கும். நான் அலுவலகத்திற்கு செல்லும் முன்பு போலிசார் வந்திருந்தார்களா என்றால் இல்லை. பொருளை கைப்பற்றிய இடத்திற்கு போலிசார் தான் என்னை அழைத்துசென்றார்கள். வாருங்கள் பார்க்கலாம் என்று சொன்னார்கள் அதனால் சென்றேன். போலிசார் புதரில் தேடிபார்த்து தான்கத்தியை எடுத்தார்கள். எனது கம்பெனி காம்பவுண்டு சுவர் 5 அடி உயரம் இருக்கும். எனது கம்பெனிக்கு வேறு கம்பெனி இல்லை. காலியாக தான் உள்ளது. எனது கம்பெனிக்கு வருவதற்கும் போவதற்கும் ஒரே வழி தான் உள்ளது. கம்பெனி முன்புறம் கதவு அதன்பின்பு கட்டடம் அதன் பின்பு கைக்கழுவும் இடம் அதன் பின்பு காம்பவுண்டு சுவர் உள்ளது. போலிசார் கத்தியை கைப்பற்றிய போது அதில் இரத்தக்கறை இருந்ததா என்றால் அது எனக்குத் தெரியாது. ஞாபகம் இல்லை. கத்தியை கைப்பற்றிய போது நான் பார்த்திருந்தால் இரத்தக்கறை இருந்ததா இல்லையா என்று எனக்கு தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. எதிரியை வருடக்கணக்காக தெரியும்.அவர் எங்கள் நிறுவனத்திற்கு பொருட்களை எடுத்து கொண்டு வந்து கொடுப்பார். இந்த சம்பவத்திற்கு முன்பு எதிரிக்கும் எங்கள் நிறுவன ஊழியர்களுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. நான் சொல்வது போல் போலிசார் அருவாளை என் முன்னிலையில் கைப்பற்றவில்லை என்றும் என்னிடம் கையெழுத்து மட்டும் தான் வாங்கினார்கள் என்ற சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் உள்ள அருவாளை தான் எடுத்து வந்தார்கள். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த கத்தியை தான் போலிசார் எடுத்து வந்தார்கள்.போலிசார் புதரில் இருந்து எடுத்து வந்தார்கள்.